


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பு, சென்னைப் பல்கலைக் கழகம் மற்றும் தென்கொரியாவின் ஹன்குக் பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து 29.4.2025 அன்று நடத்திய கருந்தரங்கின் ஆய்வுப் பதிப்பான “தூரக்கிழக்கில் தமிழ் ஆய்வுகள் : கொரியா” எனும் புத்தகத்தை வெளியிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் மரபு அறக்கட்டளை பன்னாட்டு அமைப்பின் தலைவர் டாக்டர் க.சுபாஷினி (Dr. K. Subashini), சென்னையிலுள்ள தென்கொரியா நாட்டு தூதர் சாங் நியுன் கிம் (Thiru. Chang Nyun Kim) மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.6.2025) தலைமைச் செயலகத்தில், என்.டி.டி.வி முதன்மைச் செயல் அலுவலர் ராகுல் கன்வால் அவர்கள் சந்தித்து பேசினார். இச்சந்திப்பின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், என்.டி.டி.வி தில்லி அரசியல் தலைவர் செல்வி வசுதா, தலைவர் (தெற்கு) வீரராகவன், சாம் டேனியல் ஆகியோர் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2025) மாதவரத்தில் நடைபெற்ற ஜாக்டோஜியோ அமைப்பின் மாநில ஒருங்கிணைப்பாளரும், தமிழ்நாடு தலைமைச் செயலக சங்கத்தின் தலைவருமான கு. வெங்கடேசனின் மகள் வெ.சா. பாரதி ஜெ. கமலேஷ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் அமைச்சர்கள் எ.வ. வேலு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் மாநிலத் தலைவர் கு. தியாகராஜன் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.6.2025) தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில் மூன்றாவது இடத்தை பிடித்த நம்ம சென்னை ரைடர்ஸ் சைக்கிளிங் குழுவினர் சந்தித்து வெற்றி கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் நிர்வாகிகள், சைக்கிளிங் வீரர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (9.6.2025) தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில் 2 வது இடத்தை பிடித்த திருச்சி RockFort Riders சைக்கிளிங் குழுவினர் சந்தித்து வெற்றி கோப்பையை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர். இந்நிகழ்வில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, , தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் நிர்வாகிகள், சைக்கிளிங் வீரர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2025) சைக்கிளிங் வீராங்கனை ஜெ.பி.தன்யதா அவர்களுக்கு சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ஆஸ்திரேலியாவில் சிறப்பு பயிற்சி மேற்கொள்ள தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாத ரெட்டி, ஆகியோர் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை சார்பில் விளையாட்டு

# வீரர் -வீராங்கனைகளுக்கு ரூ.34.19 லட்சம் நிதி - விளையாட்டு உபகரணங்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

சென்னை, ஜூன் 11 - தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 34.19 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை வழங்கினார்.

முதலமைச்சர் அவர்கள் இந்தியாவின் விளையாட்டு தலைநகராக தமிழ்நாட்டினை உருவாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றார். அதனடிப்படையில் விளையாட்டு வீரர்களுக்கு உதவுவதற்காக தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளையை துவக்கி அந்த நிதியில் இருந்து விளையாட்டு உபகரணங்கள் வாங்க நிதியுதவி வழங்கப்படுவதுடன், வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்கவும், விளையாட்டு வீரர்கள் சர்வதேச, தேசிய அளவிலான போட்டிகளில் பங்கு பெறும் வகையில் சிறப்பு பயிற்சிகள் மேற்கொள்ளவும் நிதியுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (9.6.2025) தமிழ்நாடு சாம்பியன் அறக்கட்டளை நிதியிலிருந்து துப்பாக்கி சுடுதல் வீராங்கனை சி.மதுமிதாவுக்கு துப்பாக்கி சுடுதல் பயிற்சிக்கான உபகரணங்களை வாங்க 1,74,000 ரூபாய்க்கான காசோ லையும், துப்பாக்கி சுடுதல் வீரர் தி.எஸ்வந்த் குமாருக்கு 4,65,450 ரூபாய்க்கான காசோலையும், வாள்வீச்சு வீரர் மோ. நிதிஷ் 1,49, 555 ரூபாய்க்கா ன கா சோலையையும் வழங்கினார்.

மேலும் சைக்கிளிங் வீராங்கனை ஜே.நிறைமதிக்கு தமிழ்நாடு சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து 9.50 லட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான அதிநவீன சைக்கிளிங் உபகரணத்தையும், சைக்கிளிங் வீராங்கனை ஜெ.பி.தன்யதாவுக்கு சர்வதேச போட்டிகளில் கலந்து கொள்வதற்காக ஆஸ்திரேலியாவில் சிறப்பு பயிற்சி மேற்கொள்ள 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் வழங்கினார்.

தொடர்ந்து கிரிக்கெட் வீராங்கனைகள் ஜெ. சஹானா மற்றும் ஜெ.நேகா ஆகியோருக்கு சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்குபெறும் வகையிலான சிறப்பு பயிற்சி பெற தலா ரூ.90 ஆயிரத்திற்கான காசோலைகள், தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியை நடத்தியதற்காக தமிழ்நாடு சைக்கிளிங் சங்கத்திற்கு 5 லட்சம் ரூபாய்க்கான காசோலை என மொத்தம் 34.19 லட்சம் ரூபாய்க்கான காசோலைகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களை சாம்பியன்ஸ் அறக்கட்டளை நிதியிலிருந்து துணை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

சைக்கிளிங் வீராங்கனை ஜே. நிறைமதி 2025 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மலேசியாவில் நடைபெற்ற ஆசியன் சாம்பியன்ஷிப் சைக்கிளிங் போட்டியில் வெண்க லப்பதக்கமும், 2025 ஏப்ரல் மாதம் டெல்லியில் நடைபெற்ற கேலோ இந்தியா விளையாட்டு சைக்கிளிங் டிராக் போட்டியில் தனிப் போட்டி மற்றும் குழுப்போட்டிகளில் வெண்கலப்பதக்கம் வென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்ச்சியில் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி, உள்பட விளையாட்டு வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.



கரூர் சட்டமன்றத் தொகுதியில் ரூ.3.56 கோடியில் 22 பணிகளை கரூர் மாவட்டக் கழகச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி துவக்கி வைத்தார். நிகழ்வில், காதப்பாறை ஊராட்சி சேரன் பள்ளி எதிரில், புதிய பயணியர் நிழற்குடையையும் திறந்து வைத்தார். கரூர் மாவட்ட ஆட்சியர் மீ.தங்கவேல், உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகள் அருகில் உள்ளனர்.

### தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில்

# முதல் மூன்று இடம் பெற்ற விளையாட்டு வீரர்கள்!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினிடம் கோப்பையைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்!

சென்னை, ஜூன் 11- துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த சைக்கிளிங் குழுவினர் சந்தித்து வெற்றி கோப்பைகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

சைக்கிளிங் அசோசியேசன் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உதவியுடன் 7.6.2025, 8.6.2025 ஆகிய நாட்களில் 3.75 கி.மீட்டர் நீளமுள்ள தீவுத்திடல் பார்முலா 4 கார் ரேஸ் நடைபெற்ற பாதையில் தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியை (3வது சீசன்) நடத்தியது. இப்போட்டிகளில் 15 வீரர்கள் வரை கொண்ட வெவ்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 8 அணிகள் பங்கேற்றன.

7.6.2025 அன்று TEAM TIME TRIAL சைக்கிளிங் போட்டி 4 சுற்றுகள் கொண்டதாகவும், 8.6.2025 அன்று CRIT RACE சைக்கிளிங் போட்டி 8 சுற்றுகள் கொண்டதாகவும், தீவுத்திடல் பார்முலா 4 கார் ரேஸ் டிராக்கில் நடத்தப்பட்டது.

இந்த போட்டிகளில் RANCYCERS அணியானது 64 புள்ளிகளைப் பெற்று ஒட்டு மொத்த சாம்பியன் கோப்பையை வென்றது .திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருச்சி Rockfort Riders அணியானது 54 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும், சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த நம்ம சென்னை ரைடர்ஸ் அணியானது 38 புள்ளிகளுடன் 3-ஆம் இடத்தையும் பிடித்தன. இந்தப் போட்டிகளில், சைக்கிளிங் வீரர் கிஷோர் இந்த பருவத்திற்கான சிறந்த வீரர் விருதினைப் பெற்றார்.

தமிழ்நாடு சைக்கிளிங் லீக் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பிடித்த குழுவினர் நேற்று முன்தினம் (9.6.2025) துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சந்தித்து, வெற்றி கோப்பைகளை காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.

இந்த நிகழ்வில் துணை முதலமைச்சர் அவர்கள் சைக்கிளிங் வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றிபெற தனது வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் அதுல்யமிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ. மேகநாதரெட்டி மற்றும் தமிழ்நாடு சைக்கிளிங் அசோசியேசன் நிர்வாகிகள், சைக்கிளிங் வீரர்கள் கலந்துகொண்டனர்.



முத்தமிழறிஞர், செம்மொழி காவலர் தலைவர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்த நாளான ”செம்மொழி நாளை” முன்னிட்டு 1968 முதல் 1972 காலகட்டத்தில் பொதுப்பணித் துறை அமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள் ”நீரார் அணைக்கு எதிர்ப்புறம் மலையைக் குடைந்து அந்த தண்ணீரை சோலையாறு அணைக்கு கொண்டு செல்ல திட்டம் உருவாக்கிய தலைவர் கலைஞர் அவர்களின் புகழைப் போற்றும் வகையில் கோவை தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பில் காடம்பாறை அணை பகுதியில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞர் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாவட்ட கழகச் செயலாளர் தளபதி முருகேசன் தலைமையில் மாலை அணிவித்து, மலர் தூவி மரியாதை செலுத்தினர். இதில் கழக நெசவாளர் அணிச் செயலாளர் நாகராஜன், வால்பாறை நகர கழக செயலாளர் குட்டி (எ) சுதாகர், நகர்மன்ற தலைவர் அழகு சுந்தரவல்லி, துணை தலைவர் செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர் ரகு துரைராஜ், ஆனைமலை வடக்கு ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.எஸ்.யுவராஜ், மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் கவிதா, கலங்கல் சிவகுமார் உள்பட பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், கழக உடன்பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.